**<u>மறுதேர்வு எழுத வரும் நபர்கள் கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்</u>**

- மறு தேர்வு அனுமதி சீட்டில் போட்டோ ஒட்டி உரிய அலுவலரால் சான்றொப்பம் பெற வேண்டும்.(படிவம் இணைக்கப்பட்டுள்ளது)
- பவானிசாகரில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள்பயிற்சி நிலையத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட **ID CARD ஐ உடன்**கொண்டுவர வேண்டும்.
- மறுதேர்வை முன்னிட்டு பயிற்சியாளர்கள், கொண்டுவர வேண்டிய ஆவணங்கள் அனைத்தையும் தேர்வுக்கு முன்னர் தேர்வு அறையில் தேர்வறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கவேண்டும்.
- **மறுதேர்வுக்கு ஆஜராகும் பயிற்சியாளர்கள் ,தங்களது தகுதிகாண் பருவம் நீட்டிப்பு செய்தமைக்கான உத்தரவு நகலுடன் தேர்வுக்கு ஆஜராக வேண்டும்.**
- **மறுதேர்வு எழுதும் பயிற்சியாளர்கள் பெயர் பட்டியல் www.cstibhavanisagar.org.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மறுதேர்விற்கு வரும் பயிற்சியாளர்கள் இதே இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள மாதிரி மறு தேர்வு அனுமதி சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அதில் தங்களது புகைப்படத்தினை ஒட்டி அதில் அலுவலகத் தலைவர் சான்றொப்பம் பெற்று தேர்வின் பொழுது கண்டிப்பாக கொண்டுவர வேண்டும். அனுமதிசீட்டு கொண்டு வராத பயிற்சியாளர்கள் மறுதேர்விற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.**
- மேற்படி ஆவணங்களைக் கொண்டு வராத நபர்கள் மறுதேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- மறுதேர்வு எழுதவருபவர்கள் பயிற்சிநிலையத்தில் தங்குவதற்கு அறைகள் மட்டுமே வழங்கப்படும். ஆறைகளில் தங்குவதற்கு தேவையான படுக்கை விரிப்பு , தலையணை , போர்வை ஆகியவற்றை பயிற்சியாளர்கள் தம்முடன் கொண்டுவர வேண்டும்.பெண் பயிற்சியாளர்கள் பழைய பெண்கள் விடுதி வளாகமும் , ஆண் பயிற்சியாளர்களுக்கு பழைய ஆண்கள்விடுதி வளாகமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விடுதிக் காப்பாளரை அணுகி அறை ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- தனியர் தேர்வுக்கு ஆஜரான பின்னர் தேர்வு எழுதியமைக்கான வருகைச்சான்று அரசு அலுவலர் பயிற்சி நிலையம் , பவானிசாகர் அலுவலகத்தில் நேரில் வழங்கப்படும்.
- குறிப்பிடப்பட்டுள்ள நபர் இம்மறுதேர்வு வாய்ப்பினைப் பயன்படுத்தி தேர்வுக்கு கட்டாயம் ஆஜராக வேண்டும். இல்லையெனில் மீண்டும் மறுதேர்வுக்கு அழைப்பு அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
- மேற்படி விவரங்களைத் தனியருக்கு தெரிவித்து தனியரை தவறாது மறு தேர்வுக்கு ஆஜராகுமாறு அறிவுரைகள் வழங்கத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் தங்கள் அலுவலகத்திலிருந்து தனியர் பணிமாறுதலில் வேறு அலுவலகத்திற்குச் சென்றிருக்கும் பட்சத்தில் இதுகுறித்த விவரம் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு உடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு – மறுதேர்வு அனுமதி சீட்டு.

**மா.வ.அ/முதல்வர்**